**DVC 15 /2023**

**02.08.2025**

**previous Date : 20.06.2025**

**PW1 சிவரஞ்சினி , க/பெ. மாதவன்**

**<u>எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. எங்கள் திருமணம் இருவீட்டார் ஏற்பாட்டின் பேரில் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு 1ம் எதிர் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரை பற்றி விசாரணை செய்து தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். நான் எனது கணவர், மாமனார், மாமியார், எனது கணவரின் சகோதரி ஆகியோர் ஒரே வீட்டில் எவ்வளவு நாள் குடியிருந்தோம் என்றால் 5 மாதங்கள். எனது கணவரின் சகோதரி நிவேதா எனது திருமணத்தின் போது வெளியூரில் வேலை செய்தார் என்றால் சரிதான். எனது வளைக்காப்பு எனது கணவர் வீட்டில் வைத்து நடந்தது என்றால் சரிதான். வளைக்காப்பு போடக்கூடாது என்று சண்டை வந்தது. பழனி மருத்துவமனையில் குழந்தை பிறந்த போது நானும், குழந்தையும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரிதான். நான் கர்ப்பமாக இருந்த போது எதிர் மனுதாரர்கள் கொடுமை படுத்தியதாக சொல்லியுள்ளதில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை கொடுமை செய்தார்கள். திருமணம் முடிந்து 5 மாதம் கழித்து நானும், 1ம் எதிர் மனுதாரரும் தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.08.02 18:06:59 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**